## தம்புள்ள பிரதேச சபை
## மாத்தளை மாவட்டம்

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்து ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 16 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 2. கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான கருத்துரைகள்

### 1.2.1 நிகழத்தக்க பொறுப்புக்கள்

தேசிய இயந்திர உபகரண பிரிவிற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 292,068 தொகை செலுத்தப்படாததன் பேரில் அந்நிறுவனத்தினால் 2012 பெப்ரவரி 21 ஆந் திகதி சபைக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து சபைக்கு அழைப்பாணை கிடைக்கப்பெறாமையால் வழக்கிற்கு சமூகமளிக்காமை காரணமாக முறைப்பாட்டாளரின் தரப்பினருக்கு வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்ததால் சபையால் 2016 பெப்ரவரி 02 ஆந் திகதி முறையீடு செய்யப்பட்டிருந்தது.

## 2. வருமான நிர்வாகம்

### 2.1 ஆதனவரி

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதனவரி அறவிடக்கூடிய முன்னேற்றமடைந்த பிரதேசம் இனங்காணப்பட்டு ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 வாடகை

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 1,426,662 ஆன நிலுவை வாடகை மீதியிலிருந்து ஆண்டில் ரூபா 464,442 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 962,220 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை வாடகை மீதி ரூபா 24,590 ஆக இருந்தது.

### 2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண மீதி ரூபா 5,007,282 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுகளுக்குரித்தாக அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 48,950 ஆக இருந்தது.

### 2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண மீதி ரூபா 1,851,837 ஆக இருந்தது.

**2.5 ஏனைய வருமானம்**

-----------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஹொட்டலொன்றிலோ சிற்றுண்டிச்சாலையொன்றோ அல்லது தங்குமிட விடுதி வருமானத்திலிருந்து ஒரு சதவீத வரி உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு அறவிட முடியுமாக இருந்த போதிலும், சபையினால் சபை நியதிகள் மற்றும் பிரதம அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில் மீளாய்வாண்டில் அவ்வியாபாரங்களிலிருந்து திரட்டிய வருமானத்திலிருந்து 0.3% சதவீதத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஏனைய வருமான மீதி ரூபா 6,950,776 ஆக இருந்ததுடன் அது ஏனைய மொத்த வருமானத்திலிருந்து 79 சதவீதம் அளவிலான கூடிய பெறுமதியொன்றாக இருந்தது.

(இ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஹொட்டெல்களிலிருந்து உப விதிகளை விதித்து கழிவுப் பொருள் கட்டணங்களை அறவிட கூடியதாக இருந்த போதிலும், அதற்காக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முச்சக்கர வண்டிகளையும் வாடகை வண்டிகளையும் நிறுத்தி வைப்பதற்கான கட்டணங்களை அறவிடுவதற்காக உப விதிகளை விதித்து கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 முத்திரைக் கட்டணம்**

---------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 4,815,849 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 9,941,070 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) புறநெகும செயற்திட்டத்தின் மூலம் பிரதேச சபையை ஸ்தாபிப்பதற்கு கட்டிமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2015 மார்ச் 17 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இடத்திற்கு சபையைக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படாமல் நகர சபை எல்லையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டிடத்தில் வாடகை செலுத்தி அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்டு வந்தது. இந்த அலுவலகத்தை காவல் புரிவதற்காக இரண்டு காவலாளிகளுக்கு 2015 மே முதல் 2016 மே வரை சம்பளமாக ரூபா 871,006 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையில் சேவை புரிந்து இறந்த, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட, வேலையை விட்டுச்சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 106,065 ஆன கடன்மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் 4 பதவிகளுக்குரிய 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் உறுப்பினர்களுக்கும் நிரந்தர பதவியணியினருக்கும் செலுத்திய சம்பளம் மற்றும் படிகளை மீள்நிரப்பாமையால் உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீள் நிரப்பப்படாத சம்பளம் மற்றும் படிகள் ரூபா 4,607,205 ஆக இருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2015 யூலை மாதத்தில் செயற்படுத்தப்பட்ட பிரதேச சபைகளை பலப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 53,650 பெறுமதியான 37 குப்பை தொட்டிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் அலுவலக வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது உரிய அங்கீகாரமின்றி சபையின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 53,441 ஆன விடுமுறை தினக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

**3.3 இனங்காணப்பட்ட நட்டம்**

சபைக்குச் சொந்தமான WPPF-3330 ஆம் இலக்க கெப் வண்டி 2015 ஏப்ரல் 13 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்த போதிலும், இவ்விபத்து தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 104(04) இன் பிரகாரம் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வாகனத்தில் எவ்வித தவறுகள் இல்லையென மோட்டார் வாகன பரிசோதகரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் பொலிசாரினால் இவ்விபத்து தொடர்பாக வழக்கு தொடரப்பட்டிருந்தது, இவ்வாகனத்தை திருத்தியமைப்பதற்கு முகவர் நிறுவனமொன்றான அசோசியேட் மோட்டர்ஸ் தனியார் தனியார் நிறுவனத்தினால் ரூபா 6,152,103 ஆன மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், விபத்துக்கள் இடம்பெற்று ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், எவ்வித எதிர்வரும் நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் இவ்வாகன விபத்தினால் மின்சார கம்பத்திற்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன் தம்புள்ள மின் அத்தியட்சகரின் மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 51,868 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. நட்டங்கள் தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் 2015 இறுதி பொதுக் கூட்டத்தின் போது இந்நட்டத்தை செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தத.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 500,000 செலவு செய்து நிக்கொல்லயாய வீதி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. இதன் போது 01 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் 915 mm ஹியும் குழாய்களை போக்குவரத்துச் செய்வதற்காக 24 km நடைமுறை சாத்தியமற்ற தூரத்திற்காக ரூபா 9,775 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே வீதியில் குருணிக்கற்களை இடுவதற்காக 2.4 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் $177m^2$ இற்காக ரூபா 35,046 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015

ஒக்தோபர் 16 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது குருணிக்கற்கள் காணப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஜானகிபுரம் வீதியை புனரமைப்பதற்காக பத்தாம்பிட்டி விவசாய அமைப்பிற்கு ரூபா 143,578 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இங்கு 04 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் ஒரு சதுர மீற்றருக்கு 02 லீற்றர் விழும் வகையில் சூடான தாரிட்டு மணலை தூவி இடப்பட்டு ரோல் செய்லதற்கு 144 சதுர மீற்றருக்கு ரூபா 38,304 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இறுதி 100 மீற்றரினுள் சில இடங்களில் குழிகள் தோன்றியிருந்ததுடன் 05 ஆவது வேலை விடயத்தின் கீழ் இரண்டாவது தார் ஊற்றுவதற்கு ஒரு சதுர மீற்றருக்கு 01 லீற்றர் விழக்கூடிய வகையில் சூடான தார் ஊற்றப்பட்டு மணல் தூவுவதற்கு 300 சதுர மீற்றருக்காக ரூபா 42,900 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இரண்டாவது தடவை தார் ஊற்றல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது பத்தாம்பிட்டிய சுடலைச்சாலையை நிர்மாணிப்பதற்காக பத்தாம்பிட்டிய விவசாய அமைப்பிற்கு ரூபா 200,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இங்கு 10 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் மனை மண்ணால் நிரப்பப்பட்டு தயாரிப்பதற்காக $5m^2$ இற்கு ரூபா 6,309 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மனை அமைத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே நிறுத்தி வைத்தல் தொகை வைத்துக் கொள்ளாமல் முழுத் தொகையும் ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கல்லெனவத்த குறுக்கு வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 405,886 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந் நிர்மாண வேலையின் 02 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் ஓரக் காண் இடுவதற்காக 900 மீற்றருக்காக ரூபா 41,400 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 ஒக்தோபர் 16 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது ஓரக் காண் காணப்படவில்லை. 03 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் $337m^3$ மீற்றர் குருணிக் கற்கள் பரப்புவதற்கு ரூபா 114,243 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தளவு குருணிக் கற்கள் இடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டின் போது பிரதேச சபைகளை பலப்படுத்துதல் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 4,000,000 நிதி ஏற்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது. 2015 ஒக்தோபர் 16 ஆந் திகதி நிர்மாணத்தை பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது சபையினால் பொருட்கள் மற்றும் உழைப்பு என்பவற்றை ஈடுபடுத்தி சபையின் பராமரிப்பு பிரிவின் மூலம் செயற்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் அந்த அறிவுறுத்தல் பின்பற்றப்படாமல் மதிப்பீடு தயாரிக்கும் போது இலாபம் சேர்க்கப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்படுவதாகவும் செலவு செய்யப்படாமல் சேமிக்கப்படும் பணத்தை 2015 மே 15 ஆந் திகதிக்கு முன்னர் பொது நிர்வாக மாகாண சபை மற்றும் சனநாயக நிர்வாகம் தொடர்பான அமைச்சிற்கு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் 10 ஆந் திகதி வரையிலும் எஞ்சிய ரூபா 1,802,500 தொகையை அமைச்சிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

முறையாக கழிவுகளை வெளியேற்றும் வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படாததன் பேரில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை வகைப்படுத்தாமல் சபையின் டிராக்டரொன்றையும் ஊழியர்களையும் ஈடுபடுத்தி வாரத்திற்கு மூன்று நாட்கள் வீதம் திகம்பதஹ பிரதேசத்தில் அரச காணியில் அகற்றப்பட்டிருந்ததுடன், கழிவுப் பொருள் தொடர்பாக முறையான மீள்சுழற்சி வேலைத்திட்டமொன்றிற்காக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.6 சுற்றாடல் சிக்கல்கள்**

பிரதேச சபையினால் அகற்றப்படும் கழிவுகள் திகம்பதஹ அரசின் வனாந்திரத்தில் இடப்படுவதால் இந்த கழிவுகளை உணவாகக் கொள்வதற்கு காட்டு யானைகள் அவ்விடத்திற்கு வருகின்ற காரணத்தினால் மிருகங்கள் உட்பட சுற்றாடலுக்கும் பாதிப்பு இடம்பெற்று வந்தது.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(i) 53-4724 ஆம் இலக்க மிட்சுபிஷி கெப்வண்டி தரைப்படையினால் எடுத்துச் செல்லப்பட்டு 2007 ஆம் ஆண்டின் போது மீண்டும் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாகனத்தை ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) SW-1448 ஆம் இலக்க மோட்டார் கேடர் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் செனொக் நிறுவனத்தின் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய தவணை சேவைகள் முறையாக மேற்கொள்ளப்படாமையால் இந்த இயந்திரம் பயன்படுத்தப்பட முடியாத நிலைமைக்கு உட்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாகனத்தை திருத்தியமைப்பதற்கோ வேறு பொருத்தமான நடவடிக்கையொன்றோ எடுக்கப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(iii) சபை பிளொக் கல் உற்பத்திக்கு பயன்படுத்தியிருந்த ரூபா 200,000 பெறுமதியான பிளொக் கல் இயந்திரம் எவ்வதி பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு 2016 மே 19 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்விற்காக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தருக்கு அலுவலகத்தின் வேறு கடமைகளும் கையளிக்கப்பட்டிருந்தன. உள்ளகக்

கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்ககள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உருவாக்கப்பட்டிருந்த போதிலும், குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டின் போது சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐயவினாக்களில் 02 இற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 426,678 ஆக இருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதியில் சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) மனித வள முகாமைத்துவம்

(ஊ) ஒப்பந்த நிருவாகம்